# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 390/2022 |
| Prosecution Witness | : | அ.சா.5 |
| Name | : | துரைராஜ் |
| Father's/Husband Name: | : | ராமசாமி |
| Address : | : | 1/286, மேற்கு தெரு, காடுர் அஞ்சல், குன்னம் வட்டம், பெரம்பலூர் |
| Age | : | 54/2023 |

தேதி: 5/12/2023

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது( **எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். செல்வராணி மற்றும் ஜெய்சங்கர் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். வழக்கின் எதிரி எனது ஊரை சேர்ந்தவர். அதனால் அவரையும் எனக்கு தெரியும். ஜெய்சங்கர் என்பவர் கிருஷ்ணாஸ் ஸ்பேர் பார்ட்ஸ் என்ற பெயரில் புதுவேட்டைகுடியில் தொழில் நடத்திவந்தார். கண்ணன் என்பவரிடம் ஜெய்சங்கர் ரூ.1,50,000த்தை கடனாக கடையை விரிவிபடுத்துவதற்காக 05.06.2020 அன்று பெற்றிருந்தார். 3சதவீத வட்டி அடிப்படையில் அந்த கடனை

பெற்றிருந்தார். அதை தவணை முறையில் மாதம் ரூ.4,500 வீதம் ஜெய்சங்கர் கண்ணனுக்கு செலுத்திவந்தார். 2021 ஆம் ஆண்டு கண்ணன் முழு பணத்தையும் செலுத்த வேண்டும் என ஜெய்சங்கரிடம் பிரச்சனை செய்தார். அதனால் ஜெய்சங்கர் கடையை கொஞ்ச நாட்களுக்கு மூடிவைத்திருந்தார். மீண்டும் 11.07.2022 க்கு முன்பு ஜெய்சங்கர் முழு பணத்தையும் கண்ணனுக்கு செட்டில் செய்துவிட்டார். 11.07.2022 அன்று கடையை திறக்க செல்வராணி மற்றும் ஜெய்சங்கர் சென்றார். கண்ணன் வந்து கடையை திறக்கக்கூடாது என மறித்துள்ளார். மேலும் 10 லட்சம் செலுத்தவேண்டும் என கூறியுள்ளார். மேலும் அசிங்கமான வார்த்தைகளாலும் பேசியுள்ளார். மேலும் கடையை நான் தான் நடத்துவேன் ஜெய்சங்கரின் இருசக்கர வாகனம் ஒன்றையும் கண்ணன் பெற்றுக்கொண்டார். அதனால் ஜெய்சங்கரும் செல்வராணியும் மன உளைச்சலில் இருந்தார்கள். மேலும் இது சம்மந்மாக பெரம்பலூர் எஸ்.பி. ஆபிசில் புகார் கொடுத்தனர். அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை போலீசாரிடமும் கூறினேனா என்றால் ஆமாம். செல்வராணி எனது அண்ணன் மருமகள். அவரது கணவரும் எதிரியும் சேர்ந்து தான் ஸ்பேர் பார்ட்ஸ் கடையை துவங்கினார்கள் என்றால் சரியல்ல. இடையில் தான் இருவரும் பங்குதாரர்களாக பணியாற்றினார்கள். அ.சா.2 ம் எதிரியும்

மாறிமாறி கடையை பார்த்து கொண்டார்கள் என்றால் சரிதான். கடையில் என்ன வரவு செலவு நடந்தது என்ற விவரம் அவர்கள் இருவருக்கும் தான் தெரியும் என்றால் சரிதான். கடையில் விற்பனை நல்லமுறையில் இருந்தது என்றால் சரிதான். கடையை விரிவுபடுத்துவதற்காக கண்ணன் பணத்தை முதலீடு செய்தார் என்றால் சரிதான். பங்குதாரரர் என்ற அடிப்படையில் தான் அவர்களுக்குள் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் இலாப நஷ்டம் என்ன இருந்தது என அவர்கள் இருவருக்கும் தான் தெரியும் என்றால் சரிதான். 05.06.2020 அன்று தான் பணம் வாங்கினார்கள் என்ற விவரத்தை போலீசார் என்னை விசாரணை செய்தபோது கூறினேன் என்றால் வருடத்தை கூறியிருப்பேன். தேதி, மாதத்தை கூறவில்லை என நினைக்கிறேன். அந்த கடன் வாங்கிய மற்றும் கொடுத்த விவரம் பற்றி யார் எனக்கு கூறினார்கள் என்றால் எனக்கு நேரடியாகவே தெரியும். பணம் கொடுத்தது எனக்கு தெரியும் ஆனால் அக்ரிமென்ட், பாண்ட் எதுவும் போட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. இரண்டு பேரும் பங்குதாரராக கடையை நடத்தியபோது கண்ணன் அதிக முதலீடு செய்ததால் மீதி தொகையை பெற்றுக்கொண்டு வியாபாரத்தை அவருக்கு கொடுக்க வேண்டும் என கூறினார் என்றால் சரியல்ல. எதிரி தற்போது தனிப்பட்ட முறையில் ஸ்பேர் பார்ட்ஸ் கடையை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். ஜெய்சங்கர் அதிலிருந்து விலக மறுத்து கடை ஜெய்சங்கர் பெயரில் இருந்ததால் எதிரியின் மீது பொய் புகார் கொடுத்தார்

என்றால் சரியல்ல. இருவரும் பங்குதாரராக பணிபுரிந்தபோது செல்வராணி அந்த கடைக்கு ஒருபோதும் வரமாட்டார் என்றால் சரியல்ல. அதன் பிறகு அந்த கடை மூடப்பட்டுவிட்டது என்றால் சரிதான். செல்வராணி ஒருபோதும் அந்த கடைக்கு போகவில்லை என்றாலும் அந்த சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாக நான் சாட்சியம் அளிப்பது பொய் என்றாலும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் செல்வராணி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுகொண்டதற்கினங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.